www.padippakam.com



# ஈழத்தவர் வரலாறு

## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ஆம் ஆண்டு வரை....

15


யாழ்ப்பாண வைபவ விமர்சனம்' என்ற நூலில் சுவாமி ஞானப்பிரகாசர் கூறுவது போல விஜய கூழங்கை என்ற பெயர் விசயகாலிங்க என்ற பெயரின் திரிபாகும் எனக் கொள்ளவேண்டும். முதலியார் செ.இராசநாயகத்திலிருந்து கா. இந்திரபால்லா வரை இக்கூற்றின் மெய்யையேற்றுக்கொள் கிறார்கள். விசயகாலிங்கன் என முடிவெடுக்கும் போது விசயகாலிங்கனைக் கலிங்கமாகன் என அடையாளம் காண்பதில் சிரமமில்லை என வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். கலிங்கமாகன் சிங்கை நகரின் மன்னனாக அமைந்ததால் சிங்கை ஆரியன் எனப்பட்டான். சிங்கை நகரிலிருந்து தலைநகரை மீண்டும் நாகதீபத்திற்கு (யாழ்ப்பாணக்குடாநாட்டிற்கு) இடம் மாற்றிய பெருமை இந்தக் காலிங்க ஆரியச் சக்கரவர்த்தியையே சேரும்.

**புதிய தலைநகர் உருவாக்கம்**

உக்கிரமசிங்க மன்னன் கதிரமலை (கந்தரோடை) யிலிருந்து தனது தலைநகரைப் பூநகரிச் சிங்கை நகருக்கு மாற்றிக்கொண்டான். யாழ்ப்பாணக்குடாநாட்டில் பௌத்தமும் சிங்களவரும் ஆதிக்கம் பெற்றதால் இத்தலைநகர் இடமாற்றம் நிகழ்ந்தது. மீண்டும் 13 ஆம் நூற்றாண்டில் இந்த நிலைமை மாறியது. நாகதீவிலிருந்து சிங்களவர்கள் தென்புலம் பெயர்ந்தனர். கலிங்கத்து மாகன் மீண்டும் உத்தரதேச மன்னானகச் சிங்கை நகரில் முடிசூடிக்கொண்ட செய்தி, எஞ்சிய பௌத்த சிங்களவர்களையும் இடம் பெயரச் செய்திருக்கும் என நம்பலாம். அக்கால நாகதீவின் தென்பகுதியில் இன்றைய நல்லூர்ப் பகுதியில் ஓரளவு வளர்ச்சி பெற்ற குடியேற்றம் ஒன்று காணப்பட்டிருக்கவேண்டும். யாழ்பாடிப் பரிசிவாகப் பெற்ற, யாழ்ப்பாணனால் உருவாக்கப்பட்ட குடியிருப்பு இதுவாகும். அதனால் இது யாழ்ப்பாணம் என்ற பெயரைப் பெற்றது. பதினைந்தாம் நூற்றாண்டிற்குப் பின் 'யாபாபட்டுண' எனவும் யாழ்ப்பாணம் எனவும் புகழ்பெறப்போகும் இந்த நகரம் முதலாவது ஆரியச்சக்கரவர்த்தி காலத்தில் பெரியதொரு கிராமக் குடியிருப்பாக இருந்திருக்கவேண்டும். குடியிருப்புக்களின் வளர்ச்சி அவ்வாறானதே. வன்னிப் பிரதேசத்திலிருந்த சிங்கை நகரைப் புதியதொரு பிரதேசத்திற்கு, அதாவது குடாநாட்டிற்கு இடம் மாற்றுவதற்குப் பல்வேறு காரணங்களை வரலாற்று ஆவணங்களிலிருந்து ஊகித்தறிய முடிகின்றது. கலிங்கத்து மாகனின் படையெடுப்பினால் இராசரட்டையின் (வன்னியுட்பட) நீர்ப்பாசன நாகரீகம் அழிவுற நேர்ந்தது. பௌத்தத்தையும் சிங்கள மக்களையும் இப்பகுதிகளிலிருந்து அகற்றும் நோக்கோடு இந்த வீரசைவனான கலிங்கத்து மாகன் எடுத்த நடவடிக்கைகள் ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளாக நன்கு பயிரிடப்பட்டு வந்த பரந்த வயல் நிலங்களை காடு பரவ வைத்தன. நீர்ப்பாசனக் குளங்கள் கவனிப்பாரின்றி சிதிலமடைந்தன. உத்தரட்டையிலும் இராசரட்டையிலும் காட்டு நோய்களும் மலேரியாவும் மக்களைப் பிடித்து அழிவை ஏற்படுத்தின. வெள்ளப்பெருக்கும் வறட்சியும் இப்பகுதிகளில் சகசமாயின. மக்கள் செறிவாக வாழ்ந்த உலர்பிரதேசம், மக்கள் அரிதாக வாழும் பகுதியாக

**-செங்கை ஆழியான்-**

மாறியது. உத்தரதேசமும் இந்த நெக்கடிக்குள்ளாகியது. அதனால் விசயகாலிங்கன் சிங்கை நகரிலிருந்து இராசதானியை வடக்கே நகர்த்த விரும்பியிருக்கலாம். ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் வன்னிப்பிரதேசத்தில் வரலாற்றுக் குடியேற்றங்கள் இருந்தன என்பதற்குச் சான்றுகளுள்ளன. இன்று இப்பிரதேசத்தில் பாழடைந்து கிடக்கும் நீர்ப்பாசனக் குளங்களும் நெல் வயல்களும் அழிபாடுகளும் இப்பிரதேசத்தின் வரலாற்றுக் காலக் குடியிருப் புக்களை வலியுறுத்தும் சான்றுகளாகவுள்ளன. இப்பிரதேசத்தின் காடுகளிடையே சிதிலமடைந்து காணப்படும் குளங்களும் அவற்றின் முறிப்பு அணைக்கட்டுக்களும் இப்பிரதேசத்தின் புராதன நீர்ப்பாச நாகரீகத்தின் மேம்பாட்டைக் காட்டுவனவாகவுள்ளன. இப்பாழடைந்த வன்னிக் குளங்களின் நீர்ப்பாய் பரப்பில் வளர்ந்திருக்கும் இளங்காடுகள் கைவிடப்பட்ட வயல்களில் வளர்ந்த மீள்காடுகள் என்பதனைக் காட்டுகின்றன. இப்பாழடைந்த குளங்களையும் கைவிடப்பட்ட வயல்களையும் நோக்கும் போது இப்பிரதேசத்தில் மக்கட் குடியிருப்புக்ள் நன்கு அமைந்திருந்தமையைப் புரிந்து கொள்ள முடியும். இப்பண்டைக் குடியிருப்புக்கள் பலவும் பல்வேறு காரணங்களால் மக்களால் கைவிடப்பட்டு காடுகளால் மூடப்பட்டன. தென்னிந்தியப்படையெடுப்புக்கள் அடிக்கடி நிகழ்ந்தன. தென்னிலங்கையைக் கைப்பற்ற விரும்பிய படைவீரர்கள் வடவிலங்கையிலேயே பாசறை அமைத்துக் கொண்டனர். அதேவேளை தென்னிலங்கைப்படைகளும் இப்பிரதேசத்தின் ஊடாக வடவிலங்கையைத் தாக்க விரும்பின. இவை காரணமாக குடாநாட்டிற்கும் தென்னிலங்கைக்கும் இடையில் நிலைமாறு வலயமாக அமைந்த வன்னிப் பிரதேசம் யுத்த களமாக அடிக்கடி மாற நேர்ந்தது. இவ்வாறு அடிக்கடி நிகழ்ந்த போர்கள், மலேரியா போன்ற கொள்ளை நோய்களால் ஏற்பட்ட அழிவுகள், கடும் வரட்சி , வெள்ளப் பெருக்கு இவை காரணமாக ஏற்பட்ட பஞ்சம் பசி என்பன யாவும் இந்தப் புராதன குளக்குடியிருப்புக்களைக்



கைவிட்டு மக்கள் வெளியேறக் காரணமாயின. இப்பிரசேதத்தில் பரவலாகக் குடியேறி வாழ்ந்த மக்கள் நான்கு திக்குகளாலும் குடிபெயர்ந்தனர். முக்கியமாக முல்லைத்தீவுக் கரையோரம், பூநகரிக் கரையோரம் என்பனவற்றிற்கும் அதிகமானோர் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் குடிபெயர்ந்தனர். முக்கியமாக முல்லைத்தீவுக் கரையோரம் , பூநகரிக் கரையோரம் என்பனவற்றிற்கும் அதிகமானோர் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் குடிபெயர்ந்தனர். சிங்கைபுரத்தை விட்டு குடாநாட்டிற்கு இராசதானியை மாற்றிக் கொள்வதற்கு இன்னொரு காரணம், காலிங்க ஆரியச் சக்கரவர்த்திக்கு இயல்பாகவே சிங்கள மன்னனிடம் அடைந்த பெருந்தோல்வியின் தாக்கமும் தூண்டியிருக்கும் என ஊகிக்கலாம். தென்னிலங்கையிலிருந்து தாக்குதல்கள் தொடரலாம் என்ற அச்சம் காரணமாக வடக்கே, பாதுகாப்பான ஓரிடத்தில் தலைநகரை மாற்ற அவன் விரும்பியிருக்கலாம். யாழ்ப்பாண - ஆனையிறவுக கடனீரேரி இயற்கையான அகழி போன்று குடாநாட்டு இராசதானிக்கு அரணாக விளங்கியது. மக்களதிகரிப்பால் வன்னிப்பிரதேசத்திலேற்பட்ட நீர்ப்பற்றாக்குறை, தரைக்கீழ் நீர்வளம் கொண்ட நன்னீர்ப்பிரதேசமான குடாநாட்டை நோக்கி நாடவைத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக தனது முன்னோர்களின் இராசதானியை மீண்டும் சைவச்சூழலில் தாபிக்க இம்மன்னன் விரும்பியுள்ளான். யாழ்ப்பாண வைபவமாலையின்படி விசயகாலிங்கனின் மந்திரியாகப் புவனேகபாகு என்பவன் இருந்திருப்பதாக அறிய முடிகின்றது. அவன் குடாநாட்டில் புதிய தலைநகரைத் தக்கவிடத்தில் தேர்ந்தெடுத்து உருவாக்கப் பணிக்கப்பட்டான். 'நல்லூர்ப் பகுதியிலே அரசிருக்கையை ஸ்தாபிக்க கருதி சோதிடர்கள் தேர்ந்து சொல்லிய நன்மூகூர்த்தத்தில் அஸ்திவாரம் போட்டு நாலுமதிலும் எழுப்பி வாசலும் ஒழுங்காய் விடுத்து மாடமாளிகைகளையும் கூட கோபுரங்களையும் ...கட்டுவித்து நகர்ப்புகுந்ததாக வைபவமாலை கூறுகிறது. இதனையே கைலாயமாலையில் வரும் தனிச்செய்யுள் பின்வருமாறு விளக்குகிறது.

இலக்கிய சகாப்த
மெண்ணூற்றெழுபதா
மாண்டதெல்லை
அலர்பொலி மாலை மார்பனாம்
புவனேக வாகு
நலமிகு யாழ்ப்பாணத்து நகரி கட்
வித்து நல்லைக்
குலவிய கந்த வேட்குக்
கோயிலும்
புரிவித்தானே

இத்தனிப்பாடலிலிருந்து மூன்று விபரங்கள் புலனாகின்றன. ஒன்று யாழ்ப்பாண நகரியை கட்டுவித்தான் புவனேகபாகு. நல்லூர்க் கந்தசுவாமி கோவிலையும் இவனே கட்டுவித்தான். அது சக வருடம் எண்ணூற்றெழுபதாமாண்டில் கட்டப்படடது எனலாம். யாழ்ப்பாண நகரி அமைக்கப்பட்ட ஆண்டின் மெய்மையை முதலில் நோக்குதல் வேண்டும்.

(தொடரும்)



சுவிஸ் அரசின் அங்கீகாரம் பெற்ற, நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும் வகையில்
நவீன டிசைன்களில் 22 கரட் தங்க நகைகள் செய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ்
SUJI JEWELLERY WORKS

தொடர்புகளுக்கு: K. THURAI Tel: 031/ 819 18 37 Fax: 031/ 819 68 92
Belp Berg Str. 10, 3123 BELP (Belp Banhof ல் இருந்து 2 நிமிட நடை தூரம்)
குறிப்பு: உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய டிசைன்களில் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
சிங்கப்பூர் நகைகளும் உடன் விற்பனைக்கு உண்டு.



படிப்பகம்